# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2040 (சித்திரை–வைகாசி) மே 2009 ஏர்-24, உழவு-5, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
கே.ஆர்.பி.மோகன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
28353214
Fax : 044-42663650

| | |
|---|---|
| தலைவர் | : கே.ஆர்.பி.மோகன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

<u>செயற்குழு உறுப்பினர்கள் :</u>

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்

| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| தலையங்கம் | - 2 |
| நன்கொடை பட்டியல் | - 4 |
| குடும்பவிழா 2009 | - 5 |
| நூல் வெளியிடு | - 7 |
| சில தகவல்கள் | - 8 |
| வாழ்த்துகிறோம் | - 9 |
| மணமகள் தேவை | - 10 |
| பிறருடன் பழகுதல் | - 11 |
| பிறந்த நாள் விழா | - 15 |
| அக்கவுண்டிங் | - 19 |
| மேனேஜ்மெண்ட் | - 22 |
| மணமகள் தேவை | - 25 |
| மணமகன் தேவை | - 28 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு - கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே!

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே !

வணக்கம். நமது கொங்கு நாடு முன்னேற்றப் பேரவையின் பொதுக்குழுவின் முடிவின்படி நாம் 12 பாராளுமன்றத் தொகுதிகளில் தனித்துப் போட்டியிடவிருக்கிறோம். அவையாவன : கோவை, பொள்ளாச்சி, திருப்பூர், ஈரோடு, சேலம், தர்மபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, கரூர், திண்டுக்கல் மற்றும் நீலகிரி. நமது தலைவர்கள் பலரும் அரசியலுக்குப் புதியவர்கள். அவர்கள் தொழில்கள் அனைத்தையும் மறந்துவிட்டு கொங்குநாடு முழுவதும் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றனர். கொங்குநாடு முன்னேற்றப் பேரவையின் மாவட்ட, வட்ட மற்றும் ஒன்றியப் பிரதிநிதிகளுள் பெரும்பாலோனர் அரசியலுக்குப் புதியவர்கள்.



நமது தலைவர்களும், முன்னோடிகளும் இரவு பகல் பாராமல் கடினமாக உழைத்து வருகிறார்கள். நமது தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் ஆகியோர் தினமும் 4 மணி நேரம் மட்டுமே உறங்குகிறார்கள் என்று அறியும் பொழுது நம் நெஞ்சம் விம்முகிறது. இந்த நிலைதான் மற்ற நிர்வாகிகளுக்கும்.

இந்நிலையில் நம் கொங்கு சமுதாயத்தில், படித்த நாம் என்ன செய்யலாம் என்று பார்ப்போம்.

நம் அனைவருக்கும் தேர்தல் வேலைகள் புதிது. சற்று கூச்சமாகவும் இருக்கும். நீச்சல் கற்றுக்கொள்ளும்பொழுது முதலில் கால் நனைக்கவே பயப்படும் குழந்தைகளின் மனநிலைதான் நமக்கு. மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ, நாம் சொன்னால் நண்பர்கள், உறவினர்கள் கேட்பார்களோ? என்று பல குழப்பங்கள் நம் மனதில் நிலவுவது இயற்கை.

நம் சமுதாய நலனை மனதில் கொண்டு இந்தக் குழப்பங்களை மனதிலிருந்து தூக்கி எறிந்துவிட்டு களத்தில் இறங்குங்கள்.

நம் தலைவர்கள், முன்னோடி நிர்வாகிகள் யாரும் நம்மை அழைக்கவில்லையே, நாம் எப்படி போவது? ஏன் போக வேண்டும்? என்றும் பலர் எண்ணத்தோன்றும், இந்தப்

பாராளுமன்றத் தேர்தல் நம் கோவை மாநாடு முடிந்த உடனே வந்துவிட்டதாலும், நாம் பாராளுமன்றத் தேர்தலில் எல்லாத் தொகுதிகளிலும் போட்டியிடும் முடிவு சற்றுத் தாமதமாக எடுத்ததாலும் கால அவகாசம் மிகவும் குறைவு. தலைவர்கள் அனைவரும் உடனடியாகப் பிரசாரக்களத்தில் குதித்தபின்பு அவர்களுக்கு ஊன் இல்லை, உறக்கம் இல்லை. அவர்கள் அசைவதுகூட ஒன்றிய, வட்ட நிர்வாகிகளின் கட்டளைக்கு ஏற்பத்தான்.

இன்றைய நிலையில் அவர்களுக்கு தொலைபேசியில் யாரையும் அழைப்பதற்குக்கூட நேரமில்லை.

35 ஆண்டுகளுக்கு முன் நம் சமுதாய முன்னோடிகள் எடுத்த முயற்சியால் தான் நமது சமுதாயம் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்கப்பட்டது. அதனால் நமது சமுதாயம் பெற்ற கல்வி, வேலை வாய்ப்புகள் நாம் அனைவரும் அறிந்ததே.

இப்பொழுது இந்த அரசியல் எழுச்சியால் நாம் பெறுகின்ற வெற்றி, நமது வருங்கால சந்ததியர்களுக்கும், நமது குழந்தைகளுக்கும் நாம் செய்கின்ற மிகப்பெரிய உதவி என்பதை நாம் உணரவேண்டும்.

எனவே இவற்றை மனதில் கொண்டு உங்கள் சொந்த ஊருக்கு குறைந்தது ஒரு வாரமேனும் சென்று உங்களது நண்பர்கள், உறவினர்கள் அனைவரிடமும் நமது வேட்பாளர்களின் (Gas Cylinder) காஸ் சிலிண்டர் சின்னத்தை அறிமுகப்படுத்த உதவுங்கள். உங்கள் ஊரிலுள்ள கொங்கு முன்னேற்றப் பேரவையின் கிளைச்செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

நாம் ஒம்வொருவரும் குறைந்தபட்சம் 100 வாக்குகளையாவது கொங்கு நாடு முன்னேற்றப் பேரவைக்குப் பெற்றுத் தர வேண்டும்.

நன்றி !

கே.ஆர்.பி.மோகன்

தலைவர்

❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | ஊர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | | 26,28,712 |
| 578 | | Numeric Power Systems Ltd., | Chennai | 24,717 |
| 579 | 709 | R.பெரியசாமி | நாமக்கல் | 2,000 |
| 580 | | E.கிருபாசங்கர் | சென்னை | 1,000 |
| 581 | | E.ராம்கார்த்திகேயன் | | 1,000 |
| 582 | G.H. | A.கணேஷ்குமார் | ஈரோடு | 1,000 |
| 583 | 2583 | P.குப்புசாமி | கோபிசெட்டிப்பாளையம் | 1,000 |
| 584 | 507 | P.K.இராமகிருஷ்ணன் | கரூர் | 1,000 |
| 585 | L.H. | M.சத்யா | திருப்பூர் | 1,000 |
| 586 | L.H. | M.பிரித்தா | திருப்பூர் | 1,000 |
| 587 | L.H. | D.மாலதி | திருப்பூர் | 1,000 |
| 588 | L.H. | K.சுமித்ரா | திருப்பூர் | 1,000 |
| 589 | 0144 | S.ஈஸ்வரமூர்த்தி | அன்னூர் | 1,000 |
| 590 | 0145 | R.சத்தீஷ் | சென்னை | 1,000 |
| 591 | 3075 | K.C.சுந்தரம் | கோவை | 1,000 |
| 592 | 3074 | S.A.நந்தகுமார் | கோவை | 1,000 |
| 593 | 0146 | M.அர்த்தனாதீஸ்வரன் | சென்னை | 1,000 |
| 594 | L.H. | P.ரம்யாதேவி | | 1,000 |
| 595 | L.H. | M.நிவேதா | பவானி | 1,000 |
| 596 | L.H. | S.சக்திபிருந்தா | ஈரோடு | 1,000 |
| 597 | L.H. | மீனாட்சி | ஈரோடு | 1,000 |
| 598 | L.H. | M.கோகிலம் | | 1,000 |
| 599 | L.H. | L.கீர்த்தனா | நாமக்கல் | 1,000 |
| 600 | L.H. | A.மது | ஈரோடு | 1,000 |
| 601 | L.H. | P.மதிமலர் | ஈரோடு | 1,000 |
| 602 | L.H. | K.தேவி | சேலம் | 1,000 |
| 603 | L.H. | R.சங்கீதா | திருப்பூர் | 1,000 |
| 604 | L.H. | K.காயத்திரி தேவி | ஈரோடு | 1,000 |
| 605 | G.H. | K.சிவசாமி | ஈரோடு | 1,000 |
| 606 | G.H. | S.ஸ்ரீபிரதீப் | ஈரோடு | 1,000 |
| 607 | L.H. | S.ஸ்ரீ புவனேஷ்வரி | சேலம் | 1,000 |
| 608 | G.H. | K.A.விஜய் | ஈரோடு | 1,000 |
| 609 | G.H. | K.M.சக்திவேல் | கோபி | 1,000 |
| 610 | L.H. | A.கார்த்திகா | ஈரோடு | 1,000 |
| 611 | L.H. | K.சர்மிளா தேவி | ஈரோடு | 1,000 |
| 612 | L.H. | P.தீபிகா | கோவை | 1,000 |
| 613 | L.H. | அமுதா | கோபி | 1,000 |
| 614 | G.H. | M.திருமூர்த்தி | சேலம் | 1,000 |
| 615 | L.H. | V.K.எழிலரசி | தருமபுரி | 1,000 |
| 616 | L.H. | K.பவதாரணி | ஈரோடு | 1,000 |
| | | மொத்தம் | | 26,92,429 |

# குடும்பவிழா 2009

## கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப்போட்டி

16-08-2009 அன்று நடைபெறவிருக்கும் இந்த ஆண்டு குடும்பவிழாவை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மணிகளுக்கான கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப்போட்டி நடத்தப்பட உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த மூன்று கவிதைகளுக்கும், கட்டுரைகளுக்கும் பரிசுகள் வழங்கப்படுவதுடன் அவை செய்தி மடலில் பிரசுரிக்கப்படும். பேச்சுப்போட்டியில் முதல் பரிசு பெற்றவர்கள் குடும்ப விழாவில் உரையாற்றுவார்கள்

**கட்டுரைப்போட்டி :–**

1. கல்லூ மாணவர்களுக்கான தலைப்பு
   'கொங்கு வேளாளர் பண்பாட்டுச் சிறப்புகள்"
2. பள்ளி மாணவர்களுக்கான தலைப்பு
   "கல்வியின் சிறப்பு"
   8ம் வகுப்பு வரை ஒரு பிரிவும், அதற்கு மேல் ஒரு பிரிவும்

**விதிகள் :–**

அ) கட்டுரை இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
ஆ) சொந்தக் கையெழுத்தில் இருக்க வேண்டும்.

**கவிதைப்போட்டி :–**

3. கல்லூரி மாணவர்களுக்கான தலைப்பு
   'கொங்கு நாட்டுப் பெருமைகள்'
4. பள்ளி மாணவர்களுக்கான தலைப்பு
   'தாய்'
   (8ம் வகுப்பு வரை ஒரு பிரிவும், அதற்கு மேல் ஒரு பிரிவும்)

**விதிகள்** :-

அ) கவிதை 12 வரிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
ஆ) சொந்தக் கையெழுத்தில் இருக்க வேண்டும்.
இ) இதுவரை வேறெங்கும் வெளிவராததாக இருக்க வேண்டும்.
கவிதை மற்றும் கட்டுரை வந்து சேரவேண்டிய கடைசி தேதி 10-07-2009

**அனுப்ப வேண்டிய விலாசம் :**

செயலாளர், கொங்கு நண்பர்கள் சங்கம், 34, சீனிவாசப்பெருமாள் சன்னதி தெரு, இராயப்பேட்டை, சென்னை- 600 0014.

**பேச்சுப்போட்டி :–**

1. கல்லூரி மாணவர்களுக்கான தலைப்பு
'கொங்கு மாவீரன் தீரன் சின்னமலை'
2. பள்ளி மாணவர்களுக்கான தலைப்பு
'காலிங்கராயன்'
(8ம் வகுப்பு வரை ஒரு பிரிவும், அதற்கு மேல் ஒரு பிரிவும்)

**விதிகள் :–**

பேச்சு 5 நிமிடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். பேச்சுப்போட்டி நடைபெறும் தேதி : 28-06-2009 காலை 9 மணி வெள்ளிவிழா இல்ல அரங்கம்

❖❖❖❖

## 2009 ஆம் ஆண்டுக்கான, சாதனையாளர் விருது மற்றும் இளம் சாதனையாளர் விருது

சங்கத்தின் சார்பில் சென்னையில் நடைபெறும் குடும்பவிழாவில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமைதேடித்தந்துள்ள சாதனையாளர்களுக்குச் சாதனையாளர் விருதும், படித்துக்கொண்டு இருக்கும் போது தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் போட்டிகளிள் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு இளம் சாதனையாளர் விருதும் வழங்கப்பட உள்ளன. இந்த ஆண்டு குடும்ப விழா காமராஜர் அரங்கத்தில் 16-08-2009 அன்று நடைபெற உள்ளது. 2009 ஆம் ஆண்டிற்கான சாதனையாளர் விருது மற்றும் இளம் சாதனையாளர் விருது வழங்க, உறுப்பினர்கள் தங்களுக்குத் தெரிந்த தங்கள் பகுதியைச் சார்ந்த சாதனையாளர்களின் விபரங்களைப் புகைப்படத்துடன் சங்க அலுவலகத்திற்கு ஜீன் 30ம் தேதிக்குள் அனுப்பிவைக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- பரணி கே.பாலசுப்பிரமணி, செயலாளர்

❖❖❖❖❖

## 10 மற்றும், +2 மாணவர்களுக்குப் பணமுடிப்பு, பதக்கம்

2009 ஆம் ஆண்டு 16-08-2009 அன்று நடைபெறவிருக்கும் குடும்பவிழாவில் இவ்வருடம் 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் முதல் மூன்று கொங்கு சமுதாய மாணவ, மாணவிகளுக்கு வெள்ளிப்பதக்கமும், பணமுடிப்பும் வழங்கப்படும். விழாவிற்கு வந்துபோக பயணக்கட்டணம், தங்கும் வசதி போன்றவை அளிக்கப்படும். தகுதியுடைய மாணவ, மாணவியர் சங்கத்திற்கு ஜீலை 15ம் தேதிக்குள் விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்துடன் சமுதாயச் சான்றிதழ் நகல், மதிப்பெண் பட்டியல் நகல், புகைப்படம் ஆகியவை கட்டாயம் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

- பரணி கே.பாலசுப்பிரமணி, செயலாளர்

❖❖❖❖❖


## முதியோர் மருத்துவரின் நூல் மலையாளத்தில் வெளியிடு



"கேரளா மூத்த மக்கள் மன்றத்தின் 12 வது மாநில மாநாடு" ஆழப்புழையில் 7-4-2009 அன்று மிக சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் முதியோர் மருத்துவர் டாக்டர் வ.செ.நடராசன் அவர்களின் "Ageing Beautifully" என்ற ஆங்கில நூலை மலையாளத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, கேரளா அரசின் முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் திரு. V.M.சுதிர் அவர்கள் வெளியிட்டார். ஆசிரியர்க்கு பொன்னாடை போற்றி கௌரவித்தார்கள். மலையாளத்தில் முதியவர்களுக்காக தனியாக இது மாதிரி ஒரு நூல் இதுவரை வெளி வந்ததில்லை என்றார், திரு. சுதிர். டாக்டர் நடராசன் அவர்கள் பேசும் பொழுது "எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் MBBS படிக்கும் பொழுது முதியோர் மருத்துவம், ஒரு கட்டாயப் பாடம் ஆக்கப்படவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். இம்மாநாட்டில் சுமார் 1500 மூத்த குடிமக்கள் பங்கேற்றனர். நூல் வேண்டுவோர் தொடர்பு கொள்ள : திரு. பாலன் மாஸ்டர், போன் : 9446331488 (குதும்பாரம்பா), விலை ரூ. 150/- பக்கம் 200

❖❖❖❖❖

## வருந்துகிறோம்



நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்திலுள்ள, புதூர் கொக்கராயன் பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. ப.முத்துச்சாமி கவுண்டர் அவர்களின் மகனும், நமது சங்கச் செயற்குழு உறுப்பினர் திரு. M.பொன்னுசாமி (Pure Chemicals) அவர்களின் சகோதரருமான திரு. கண்ணையன் என்கிற ப.மு. பழனியப்பன் அவர்கள் தமது 62ஆவது வயதில் இயற்கை எய்தினார் என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரது பிரிவால் வாடும் மகன்கள் திரு. ப.பரமேஸ்வரன், திரு. ஸ்ரீ கிருஷ்ணன் மற்றும் குடும்பத்தார்க்கு கொங்கு நண்பர்கள் சங்கம் ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது ஆன்மா சாந்தியடைய சங்கம் பிரார்த்திக்கிறது.

❖❖❖❖❖

# உலகம் : சில தகவல்கள்

| | | |
|---|---|---|
| பரப்பு | : | 510.072 மிலி. ச.கி.மீ |
| நிலப்பரப்பு | : | 148.94 மிலி, ச.கிமீ |
| நீர்ப்ரப்பு | : | 361.132 மிலி. ச.கிமீ |
| உலகின் நில எல்லை | : | 250,708 கி.மீ |
| கடற்கரைப்பரப்பு | : | 3,56,000 கி.மீ |
| மக்கள் தொகை (2007) | : | 6,60,22,24,175 |
| பிறப்பு விகிதம் (2007) | : | 20.09 பிறப்பு / 1000 பேருக்கு |
| இறப்பு விகிதம் (2007) | : | 8.37 இறப்பு / 1000 பேருக்கு |
| சராசரி ஆயுள் | : | 65.82 வருடம் |
| ஆண்கள் | : | 63.89 வருடம் |
| பெண்கள் | : | 67.84 வருடம் |

## உலகின் சில உச்சங்கள்

| | | | |
|---|---|---|---|
| மிக உயர்ந்த பகுதி | : | எவரெஸ்ட் | நேபாளம் |
| மிக தாழ்ந்த பகுதி | : | சாக்கடல் | ஜோர்டான் |
| மிகப் பெரிய கடல் | : | தென் சீனக்கடல் | பசபிக் |
| மிக நீளமான ஆறு | : | நைல் | ஆப்பிரிக்கா |
| மிக பெரிய பாலைவனம் | : | சஹாரா | வட ஆப்பிரிக்கா |
| மிக குளிரான பகுதி | : | அண்டார்டிகா | (-56.7* செல்ஷியஸ்) |
| மிக உயர்ந்த பகுதி | : | அட்டகாமா, சிலி | |
| மிகப்பெரிய கண்டம் | : | ஆசியா | |
| மிகப்பெரிய உப்பு நீர் ஏரி | : | காஸ்பியன் கடல் | |
| மிகப்பெரிய நன்னீர் ஏரி | : | சுப்பீரியர், அமெரி | கனடா |
| மிகப்பெரிய நீர் வீழ்ச்சி | : | ஏஞ்சல் | வெனிசுவேலா |
| மிகப்பெரிய சதுப்பு நிலம் | : | சுந்தரவனம் | இந்தியா |
| மிகப்பெரிய தீவு | : | கிரீன்லாந்து | |
| மிகப்பெரிய தீவுக்கூட்டம் | : | இந்தோனேஷியா | |
| மிகப்பெரிய சமவெளி | : | கங்கைச் சமவெளி | |
| மிகப்பெரிய வனம் | : | கோனிஃபெரஸ், ருஷ்யா | |

- நன்றி : மனோராமா இயர்புக் 2009

❖❖❖❖

# வாழ்த்துகிறோம்



பிரிக்கேடியர் ரவிவர்மன் அவர்களுக்கு, சென்னை பல்கலைக்ககம் 19-01-2009 அன்று, மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜீத் சிங் பர்னாலா அவர்களது தலைமையில், தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு பொன்முடி அவர்கள் முன்னிலையில் டாக்டர் பட்டம் வழங்கியது.

டாக்டர் பட்டத்திற்காக அவர் சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரை "Wisdom Warfare Approch to National Security (Study of Revolution in Emergency Affairs in Emerging Security Pardigm) Defence Studies. அன்னார் நாமக்கல் மாவட்டம் கீரம்பூர் பண்ணைகுலத்தைச் சேர்ந்தவர். தற்போது டெபுட்டி டைரக்டர் ஜெனரல் (ரெக்குருட்டிங்) ஆக தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவுகளுக்குப் பொறுப்பாளராக உள்ளார்.

இவரின் மனைவி திருமதி அருணா ரவிவர்மன் அவர்கள் சமுதாய சேவையில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். அன்னார் அவர்களின் தம்பி திரு. தனபால் தமிழகக் காவல்துறையில் டி.எஸ்.பி.ஆக உள்ளார்.

டாக்டர் பட்டம் பெற்ற பிரிகேடியர் திரு. ரவிவர்மன் அவர்களை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்தி மகிழ்கிறது.

❖❖❖❖

# மணமகள் தேவை

காளியம்மன் துணை

| | | | |
|---|---|---|---|
| ஜாதகர் பெயர் | : K.R.குணசேகரன் | தமிழ் வருஷம் | : சாதாரண வருடம் |
| தகப்பனார் பெயர் | : ராமசாமி (லேட்) | மாதம் | : மார்கழி தேதி 26 |
| தாயார் பெயர் | : பழனியம்மாள் | கிழமை | : ஞாயிறு பகல் 2.15 |
| ஊர் | : புதூர் கொக்கராயன் பேட்டை | நட்சத்திரம் | : திருவாதிரை |
| | | ராசி | : மிதுனம் |
| கூட்டம் | : கண்ணங்கூட்டம் | இலக்கணம் | : ரிஷபம் |
| பிறந்த தேதி | : 10-01-1971 | இருப்பு திசை | : ராகு 10.9.4 |

போன் : வீடு. 225331, கடை 225361, Cell : 9843310009

தொழில் : உரம், பூச்சிமருந்து, சிமெண்ட்
மாத வருமானம் : 20 ஆயிரம் ரூபாய்
தோட்டம் : 3 ஏக்கர், சொத்து மதிப்பு 50 லட்சம் ரூபாய்
தொடர்புக்கு : சின்னையன், 9842741221

| | | | |
|---|---|---|---|
| | சனி | லக்னம் | சந்திரன் |
| ராகு | இராசி | | |
| | | | கேது |
| சூரி புதன் | குரு சுக் | செவ்வாய் | |

| | | | |
|---|---|---|---|
| | கேது | புதன் | செவ் |
| | நவாம்சம் | | |
| சந் | | | வியா |
| | சூரி | ல ராகு சனி | சுக் |

## புதிய சூரியனாய் உதித்துவிடு

மாற்றங்கள்
முன்னேற்றத்தின் முன்மொழிகள் !
மாற்றங்களை
ஏற்றுக்கொள்ளத் தயாராகும்போது
வளர்ச்சியின் வாசல் திறக்கிறது

மாற்றங்களை
மாற்ற முயற்சிக்காதே !
ஏனென்றால்
மாற்றங்களே
வளர்ச்சியின் ஏற்றம் !

மாற்றங்களை
மாற்றுவதை விட
அம்மாற்றங்களை
முன்னேற்றமாக்க முயற்சிப்பதே
முயற்சிகளில் முதன்மையானது !

- சிந்தனைக் கவிஞர் கவிதாசன்

# பிறருடன் பழகுதல்

- பத்மபூஷன் பெ.தூரன்

குழந்தை ஆரம்பத்தில் தனது தாய் தந்தையுடனும் வீட்டிலுள்ள மற்றவர்களுடனும் பழகுகிறது. இவர்கள் எல்லோரும் குழந்தையிடம் அன்பு காட்டுகிறார்கள். அதற்கு உணவு கொடுக்கிறார்கள், வேடிக்கை காட்டுகிறார்கள், அதைப்பாதுகாக்கிறார்கள். அதனால் குழந்தைக்கு அவர்களிடம் பிரியம் உண்டாகிறது.

குழந்தையின் மேலுள்ள அன்பினால் வேண்டியவற்றையெல்லாம் பெற்றோர்களே செய்கிறார்கள். குழந்தை ஒன்றை நினைக்கும்போதே அதைத் தேடிக்கொடுக்கிறார்கள், தானாகவே அது செய்து கொள்ளக்கூடிய காரியத்தையெல்லாம் இவர்கள் செய்வதால், குழந்தை வயது வந்த காலத்திலும் எதற்கெடுத்தாலும் பிறரையே எதிர்பார்த்து நிற்கும் மனப்பான்மையை அடைகிறது.

வளர வளரக் குழந்தை தானாகவே சிறு சிறு காரியங்களைச் செய்யக்கூடிய ஆற்றல் பெறுகிறது. அவற்றைச் செய்வதிலும் மகிழ்ச்சியடைகிறது. ஆதலால் அவற்றைச் செய்யக்குழந்தைக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

சரோஜாவுக்கு இரண்டு வயது. அவளுக்குத் கன் வட்டிலைத் தானே கழுவி எடுத்துக்கொண்டு வந்து வைத்துக்கொள்வதில்தான் விருப்பம். அந்தக்காரியத்தை அவளே சுத்தமாகச் செய்யப் பழக்கிவிடலாம். அப்படியில்லாமல், குழந்தை எப்படி இதைச் செய்யும் என்று நாமே செய்து விடுவது நல்லதல்ல அவளுக்குத் தன்னம்பிக்கை வயது முதுற்கொண்டே ஏற்படவேண்டும்.

பெற்றோர்களோ எல்லாச் சௌகரியங்களையும் சிரத்தையோடு கவனிப்பதால் குழந்தை மற்றவர்களிடமிருந்தும் இம்மாதிரி உதவியையே நாடுகிறது. வீட்டில் உள்ளவர்களைப்போலவே மற்றவர்களும் தன்னைக் கவனித்துப் பாராட்டவேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

அப்படி எதிர்ப்பார்த்துக் குழந்தை ஏமாற்றம் அடைகிறது. அதனால் தனது குடும்பத்தோடு மட்டும் பழகிக்கொண்டு சமூகத்தில் மற்றவர்களோடு தொடர்பு அதிகம் வைத்துக்கொள்ளாமல் இருக்கவே விரும்புகிறது. இது பிற்காலத்திலே அதன் வாழ்க்கைக்குப் பாதகமாக முடியும்.

பெற்றோர்கள் அன்பின் மிகுதியால் செய்யும் காரியம் குழந்தை பிறரிடம் பழகிச் சமூகத்தில் கலந்து வெற்றியுடன் வாழ்வதற்கு இடையூறாக ஏற்படலாம். அது என்றும் தன்

தாய் தந்தையர்களைப் போலவே தன்னிடம் அனுதாபங்காட்டும் சிலரையே எதற்கும் நாடிநிற்கும். அதோடு மற்றவர்கள் தன்னைக் கவனிக்காததைக் கண்டு பல தடவைகளில் ஏமாற்றமும் சங்கடமும் அடையும்.

தன்னம்பிக்கையோடு, எதிர்ப்படும் இடைஞ்சல்களையெல்லாம் விலக்கிக்கொண்டு போகிறவனே வாழ்க்கையில் வெற்றிபெறுவான் என்கிற உள்ளப்பான்மையைச் சிறு வயதிலிருந்தே குழந்தை தனக்கு வேண்டிய சிறு சிறு சௌகரியங்களைத் தானே செய்து பழகுவதால் பெற வேண்டும். அதற்குத் துணைபுரிவது பெற்றோர்களின் கடமை. தன்னை எல்லோரும் ஒரே விதமான அன்புடன் நடத்தமாட்டார்கள் என்பதையும், அப்படி எதிப்பார்க்கவும் கூடாது என்பதையும் குழந்தை மெதுவாக உணர வேண்டும். இந்த உணர்ச்சி இயல்பாக வரவேண்டுமே ஒழிய ஒரு பெரிய அதிர்ச்சியாக ஏற்படக்கூடாது. பிறருடன் அவ்வப்போது குழந்தையைப் பழக விடுவதே இதற்குச் சரியான வழி.

குழந்தை தனக்கு வேண்டியதையெல்லாம் தாயாரைச் செய்யும்படி ஏவச் சீக்கிரம் கற்றுக்கொண்டு விடுகிறது. அதிலும் தாய் உறுதியுடன் இல்லாவிட்டால் வெகு சுலபமாக அது இதைச்சாதித்துக்கொள்ளும் பெரிய குரல் எடுத்து அழ ஆரம்பிக்கும். இல்லாவிட்டால் கீழே விழுந்து புரளும். இப்படிச்செய்தால் தாய் தனக்கு வேண்டியதைச்செய்வாள் என்று அதற்கு நன்றாகத் தெரியும் இப்படிப் பழகிய குழந்தை மற்றவர்களிடத்தும் எல்லா உதவியையும் எதிர்பார்க்கிறது. இந்த மனப்பான்மையைத் தடுக்கவேண்டுமானால், மற்ற குழந்தைகளுடனும் பெரியவர்களுடனும் சேர்ந்து அவர்கள் மத்தியில் இருக்க அடிக்கடி சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

வேறு சிறுவர்களின் மத்தியில் விட்டால் குழந்தை முதலில் தனியாக இருக்கவே முயல்கிறது. உடனே அவர்களுடன் பழகுவதில்லை. அங்குள்ளவர்கள் அறிமுகமில்லாதவர்களாக இருப்பதால் இம்மாதிரி ஏற்படுகிறது. ஆனால் ஏதாவது ஒரு விளையாட்டோ வேடிக்கையோ இருந்தால் சுலபமாக அவர்களுடன் சேர்ந்து அதில் பங்கெடுத்துக்கொள்ள ஆரம்பிக்கிறது. விளையாட்டிலும் வேடிக்கையிலும் உள்ள உத்ஸாகம் தன்னை மறந்து பிறருடன் கலந்து கொள்ளத் தூண்டுகிறது.

அப்படிக் கலந்துகொள்ளும்போது குழந்தை சாதாரணமாகச் சம வயதுள்ளவர் களிடமே அதிகம் பழகும். இதுவே இயற்கை. ஒரு குழந்தை தன்னைவிட மிகக்குறைந்த வயதுள்ளவர்களுடன் பழகவே நாடுகிறதென்றால், அதனால் சம வயதினர்களுடன் ஏதோ ஒரு காரணத்தால் பழக இயலவில்லை என்பது வெளியாகிறது. ஒரு குழந்தை தன்னைவிடப்

பெரியவர்களையே நாடினால் பெரும்பாலும் பெற்றோர்களிடம் அடைந்த சௌகரியங்களையே அவர்களிடம் அது எதிர்பார்த்து அவ்விதம் செய்கிறதென்று தெரிந்துகொள்ளலாம்.

மற்றவர்களிடம் பழகுகிற காலத்தில்தான் குழந்தை எப்பொழுதும் தனது சௌகரியத்தையே கவனதித்துக்கொண்டிருப்பதை விட்டு விட்டுப் பிறருடைய சௌகரியத்தையும் கவனிக்கவேண்டும் என்பதை உணர்கிறது. சுயநலத்தையே எப்பொழுதும் பாராட்டிக்கொண்டிருக்க முடியாது என்பதும் அதற்குப் புலனாகிறது. பிறருடைய நடத்தையைக் காண்பதால் மக்களுக்குள் உள்ள தாரதம்மியத்தையும் அறிய ஆரம்பிக்கிறது.

வயது ஆக ஆக நம்முடைய நண்பர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருவதை நாம் அநுபவத்தில் காணலாம். ஒருவனுடைய தன்மைக்கு ஏற்றுவாறு சிலரே முடிவில் நண்பர்களாக அமைகிறார்கள். ஆனால் அப்படி அமையும் நண்பர்களை நிர்ணயிப்பதற்கு அவனுக்கு மற்றவர்களுடைய தன்மையை அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் தன் வாழ்வில் பல துன்பங்களுக்கு ஆளாக நேரிடும். இந்த ஆற்றலைக் குழந்தைப்பருவம் முதற்கொண்டே பலருடன் பழகும் வாயிலாக வளர்க்க வேண்டும்.

சிலர் தமக்கு ஏற்ற தோழர்களைக் கொள்ளாமல் இருப்பதைக் கண்டு நாம் வியப்படைகிறோம். இவருக்கென்ன அறிவில்லையா? பிறகு ஏன் இப்படிச் சிநேகிதம் வைத்துக்கொண்டிருக்கிறார்? என்று ஆச்சரியப்படுகிறோம். தம் தோழரைப்பற்றி மற்றவர்கள் சுலபமாக அறிந்துகொள்ளக்கூடிய விஷயங்களை அவர்கள் அறியாமலிருக்கிறார்கள் இதற்குக் காரணம் அவர்களுக்குப் பலருடன் பழகி அவர்களுடைய தன்மையை உணர்ந்து கொள்ளக்கூடிய திறமை இல்லை என்பதுதான். அதை விருத்தி செய்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் சிறு வயதிலிருந்தே அவர்களுக்குக் கிடைத்திருக்காது.

சில பெற்றோர்கள் தங்கள் அனுபவத்திலிருந்து விரும்பத்தகாதவர்கள் என்று தெரிந்தவர்களிடம் குழந்தையை நெருங்க விடாமல் சர்வ ஜாக்கிரதையாகத் தடுத்து வைப்பார்கள். அது ஒரு வகையில் நல்லதென்றாலும் குழந்தைக்கு உலகத்தில் இப்படிப்பட்டவர்களும் உண்டு என்பதே தெரியாமல் போய்விடக்கூடாது, குழந்தைக்கு விரும்பத்தகாவர்களும் உண்டு என்பது முற்றும் தெரியாவிட்டால், அது வாழ்க்கையில் ஏமாந்து போய் விடலாம். தனது பிற்கால வாழ்வில் அவர்களைக்கண்டு அவர்களிடம் தான் இதுவரையில் கண்டிராத புது மாதிரி நடத்தையைப் பார்த்து அதனால் அவர்மேல் அது

பற்றுக்கொள்ளவும் நேரிடும். சமூகவாழ்விலும் மற்ற துறைகளில் போலவே குழந்தைதானே பழகித்தான் மற்றவர்களை அறிந்துகொள்ளப் பழக்கம் ஏற்படவேண்டும். நல்லவர்களை அறிந்து அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் கெட்டவர்களை அறிந்து அவர்களை ஒதுக்கவும் அதற்கு வழிகாட்ட வேண்டுமே ஒழிய கெட்டவர்களும் உண்டு என்பதை அதற்குத் தெரியாமலே மறைத்துவிடுவது நல்லதல்ல. மனிதர்கள் பலவிதமான குணங்களையுடையவர்கள் என்பதையும் எல்லோரும் ஒரேமாதிரி அல்ல என்பதையும் குழந்தை தனது அனுபவத்தால் நயமாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதனால் கெட்டவர்களுடன் குழந்தை பழகவேண்டும் என்பதல்ல, அப்படியும் சிலர் உண்டு என்பதைக் குழந்தை அறியாமலிருந்து பிற்கால வாழ்வில் ஏமாற்ற மடையக்கூடாது என்பதே என் கட்சி.

பிறருடன் குழந்தை பழகவேண்டும் என்கிறபோது ஒரு முக்கியமான விஷயத்தை நாம் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். வேறு குழந்தைகளுடனும், பெரியவர்களுடனும் நாள் முழுவதும் பழகுவது வேறொன்று. நாள் முழுவதும் பழகவேண்டியவர்கள் அடிக்கடி மாறிக்கொண்டிருப்பது குழந்தைக்கு நல்லதல்ல. ஐந்து வயது வரையில் குழந்தை தனது சூழ்நிலைக்கும் தன்னுடன் நீடித்துப்பழகுவருக்கும் தகுந்தமாதிரி நடக்கக் கற்றுக்கொள்ளுகிறது. அதனால் அந்தச்சமயத்தில் வசிக்கும் இடத்தை அடிக்கடி மாற்றுவதும் புதிய புதிய மனிதர்களோடு பழகவிடுவதும் குழந்தைக்குக் கலக்கத்தை உண்டுபண்ணுகிறது. எவ்வாறு தனது நடத்தையை அமைத்துக்கொள்ளவேண்டும் என்பதை அது இவ்விதமாறுதலால் அறியமாட்டாது திகைப்படையும். உதாரணமாகக் குழந்தையிடம் பழகுகிற வேலைக்காரர்கள் அடிக்கடி மாறிக்கொண்டே இருந்தால் ஒவ்வொருவருடைய தன்மைக்கும் ஏற்றவாறு அவர்கள் குழந்தையிடம் நடந்து கொள்வார்கள்.குழந்தைக்கு அது பெரிய கலக்கத்தை அளிக்கும். ஆதனால் இந்த வித்தியாசத்தை மனத்தில் வைத்துக்கொண்டு குழந்தையை மற்றவர்களுடன் பழகவிட வேண்டும். நீடித்துப்பழகுகிறவர்கள் நல்லவர்களாகவும் இருக்கவேண்டும்.

குழந்தை உலகத்திற்குத் தனியாக வருகிறது. அப்பொழுது அதற்கு யாரிடத்திலும் தனிப்பட்ட அன்பு இருப்பதாகத் தெரியவில்லை. பிறகு, தன்னைப் போஷித்துப் பாதுகாக்கும் தாயிடம் அன்பு கொள்ளுகிறது. அதன்பின் தகப்பனிடம் அன்பு கொள்ளுகிறது. தன்னைச் சூழ்ந்திருக்கும் மற்றவர்களிடம் பிரியம் காட்டுகிறது. அவர்களுடன் இருப்பதில் இன்பம் காண்கிறது. சிறிது சிறிதாக இந்தத் தொடர்பும் அன்பும் விரிந்து கொண்டே போகின்றன.

தொடர்ச்சி அடுத்த இதழில்.....

❖❖❖❖

# அக்கவுண்டிங்

அக்கவுண்டிங் ஒரு முக்கியப் படிப்பு. பொறியியல், மருத்துவப்படிப்புகளில் சேருவதில் இருக்கும் பரபரப்பு இதற்கான படிப்புகளில் இருப்பதில்லை, ஆனாலும் அக்கவுண்டிங் தொடர்பான படிப்புகளைப் படிப்பவர்கள் சப்தமில்லாமல் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. தொழில் துறையின் பெருவளர்ச்சி அக்கவுண்டன்டுகளின் தேவையை அதிகப்படுத்தியிருக்கிறது.

பிளஸ் டூ வகுப்புகளில் வணிகவியல், அக்கவுண்டன்சி, பொருளாதாரம் போன்ற கலை, வணிகவியல் பாடப்பிரிவுகளை எடுத்துப்படிக்கும் மாணவர்களின் முதல் சாய்ஸ் வணிகவியல்தான், பி.காம். படித்து முடித்த உடனேயே அதற்கென தனி வேலை வாய்ப்புகள் கிடைப்பது என்பது மற்ற பட்டப் படிப்புகளைப் போலதான்.

இருந்தாலும் வணிகவியல் பாடப்பிரிவு மாணவர்களைத் தொடர்ந்து கவரக்கூடிய படிப்பாகவே பி.காம் உள்ளது குறிப்பிடத்தக்கது. அதற்கு மற்றொரு முக்கியக்காரணம், பி.காம். போன்ற படிப்புகளைப் படிக்கும் போதே சி.ஏ., ஐ.சி., டபிள்யூ ஏ போன்ற படிப்புகளில் ஏதாவது ஒன்றைப் படிக்க முடியும். இதன் மூலம் மிகப்குறுகிய காலத்திலேயே நல்ல வேலைவாய்ப்பைப்பெற முடியும். அத்துடன் இந்தத் தொழில் படிப்புகளைப் படிப்பதற்கு கட்டணம் அதிகல்லை. அத்துடன் சி.ஏ., ஐ.சி.டபிள்யூ ஏ போன்ற படிப்புகளில் சேருவது மிகவும் எளிது. ஆனால் கடுமையாகப் படித்தால் தான் இத்தேர்வுகளில் தேர்ச்சிபெற முடியும். ஆனால் இந்தச் சவாலைச் சந்திக்க ஏராளமான வணிகவியல் மாணவர்கள் தயாராக உள்ளனர் என்பதுதான் இப்போதைய நிலவரம்.

தனிநபர்கள் மட்டுமல்லாமல் நிறுவனங்களின் கணக்கு வழக்குகளைச் சரிபார்த்து வருமான வரித்துறைக்குக் கணக்குகளைத் தாக்கல் செய்பவர்கள் சாட்டர்ட் அக்கவுண்டன்டுகள். கம்பெனிகளின் கணக்கு வழக்குகளை சரிபார்த்து ஆடிட் செய்யும் அதிகாரம் இவர்களுக்குத்தான் உண்டு. உடனடியாக வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய சி.ஏ. என்று அழைக்கப்படும் சார்ட்டிடர்ட் அக்கவுண்டன்ட் படிப்பு.

- ❑ இப்போது சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட் ஆக வேண்டுமானால் பட்டப்படிப்பு படித்து முடிக்கும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. பிளஸ் டூ முடித்த உடனேயே சேர்ந்து விடலாம்.
- ❑ மாலை நேரக் கல்லூரி வாயிலாகவோ அல்லது தொலை நிலைக் கல்வி வாயிலாகவோ வேறு பட்டப்படிப்புகளில் சேர்ந்து படித்துக்கொண்டே இப்படிப்பையும் படிக்க முடியம்.

- நல்ல திறமையானவர்களை இளம் வயதிலேயே கவர்த்திழுப்பதற்காக இந்த நிறுவனம் பிளஸ் டு மாணவர்களை சி.ஏ. படிப்பில் சேர்க்கிறது. இதனால் பிளஸ் டு மாணவர்கள் இப்படிப்பில் நேரடியாகச் சேர்ந்து படித்து 21 வயதிலேயே சி.ஏ., ஆகிவிட முடியும்.
- சி.ஏ.படித்து முடித்தவர்கள் ஆடிட்டராகலாம். அரசுத்துறை நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், தணிக்கை நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், பங்கு சந்தை நிறுவனங்கள் இப்படி சி.ஏ. படித்தவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு காத்திருக்கிறது.

வளர்ந்துவரும் பி.பி.ஓ. துறைக்கு அடுத்த தலைமுறையாகக் கருதப்படுவது கே.பி.ஓ. (Knowledge Process Outsourcing) எனப்படும் துறை. இதிலும் சி.ஏ.க்கள் முத்திரை பதித்து வருகிறார்கள். கம்ப்யூட்டர் திறமை, ஆராய்ச்சி மனப்பான்மை, டேட்டா பேஸ்களை நிர்வகிக்கும் திறன், ஆங்கில எழுத்தாற்றல் இவற்றோடு குறிப்பிட்ட துறையில் சிறப்பு நிபுணத்துவம் தேவைப்படுகிற கே.பி.ஓ. துறை. கணக்கிலும் ஆய்வு நுட்பத்திலும் திறமை பெற்ற சார்ட்டர்ட் அக்கவுண்டன்டுகளை இரு கரம் நீட்டி வரவேற்க காத்திருக்கிறது.

பிசினஸ் அண்ட் டெக்னிக்கல் அனாலிஸிஸ், லீகல் சர்வீஸஸ், டேக்ஸ்சேஷன் கன்ஸல்டன்ஸி, அறிவுசார் சொத்துரிமை போன்ற பல்வேறு துறைகளில் சி.ஏ.க்களுக்கு கே.பி.ஓ. சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கிறது.

**அக்கவுண்டிங் டெக்னீஷியன்**

சிறிய நடுத்தர தொழில் நிறுவனங்களில் அக்கவுண்டன்டுகளின் தேவையைக் கருத்தில் கொண்டு அக்கவுண்டிங் டெக்னீஷியன் என்ற புதிய சான்றிதழ் படிப்பை இன்ஸ்டிட்யூட் ஆஃப் காஸ்ட் அண்ட் ஒர்க்ஸ் அக்கவுண்டன்ட்ஸ் (ஐ.சி.டபிள்யூ.ஏ.) தொடங்கியுள்ளது. பிளஸ் டு படித்த மாணவர்கள் இதில் சேரலாம். அடுத்த மூன்று ஆண்டுகளில் பத்து இட்சம் அக்கவுண்டிங் டெக்னீஷியன்கள் தேவைப்படுவார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தச் சான்றிதழ் படிப்பைப் படித்த மாணவர்கள், தொடர்ந்து படித்து காஸ்ட் அண்ட் மேனேஜ்மெண்ட் அக்கவுண்டன்டுகளாகவும் மாறலாம்.

**காஸ்ட் அக்கவுண்ட்**

ஆத்துல போட்டாலும் அளந்து போடணும் என்பார்கள். இதுபோல ஒரு பொருளை உருவாக்க எவ்வளவு செலவு செய்ய வேண்டும், எந்த அளவுக்கு விலை வைத்தால் சந்தையில் வெற்றிகரமாக விற்பனை செய்ய முடியும் என்பதைக் கணக்கிட்டுச் சொல்வது காஸ்ட் அக்கவுண்டன்டுகளின் பணியாகும்.

- தொழில் நிறுவனங்களை அறிவியல் ரீதியாக நிர்வாகம் செய்வதற்காக காஸ்ட் அக்கவுண்டன்டுகளை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புதான் இன்ஸ்டிட்யூட் ஆஃப் இந்தியா (ஐ.சி.டபிள்யு.ஏ.). மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட இந்த நிறுவனம் கொல்கத்தாவில் இயங்கி வருகிறது.
- பிளஸ் டூ படித்த மாணவர்கள் கூட இப்படிப்பில் சேரலாம். அக்கவுண்டிங் துறையில் ஆர்வமும் நிர்வாகத்துறையில் பணிபுரியும் எண்ணமும் ஆய்வியல் நோக்கமும் உடையவர்களுக்கு ஏற்ற பணி இது. இப்படிப்பில் சேர்ந்து படித்துக்கொண்டே வேறு பட்டப் படிப்புகளையும் படிக்கவும் வாய்ப்புகள் உள்ளன.
- ஐ.சி.ட.பிள்யூ.ஏ. படிப்பின் ஃபவுண்டேஷன் கோர்ஸுக்குபடிப்புக் காலம் ஆறுமாதம். அதையடுத்து ஓராண்டு இன்டர்மீடியட் படிப்பையும், ஓராண்டு ஃபைனல் படிப்பையும் படிக்கவேண்டும். இதற்கிடையே இப்படிபில் சேரும் மாணவர்களுக்கு நேர்முகப்பயிற்சியும் உண்டு. அத்துடன் கம்ப்யூட்டர் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.
- காஸ்ட் கண்ட்ரோலர், மார்க்கெட்டிங் மேனேஜர், சீஃப் இன்டர்னல் ஆடிட்டர் சீஃப் அக்கவுண்டன்ட், ஃபைனான்ஸ் கண்ட்ரோலர், ஃபைனான்ஸ் டைரக்டர்.. இப்படி பல பொறுப்புகளை வகிக்க முடியும்.
- சி.ஏ., ஐ.சி.டபிள்யூ.ஏ. போன்ற அக்கவுண்டிங் படிப்புகளைப் படிக்கச் செலவு குறைவு. ஆனால் அதேசமயம் இப்படிப்புகளைப் படித்தவருக்கும் கிடைக்கிறது. கை நிறைய காசு இந்த படிப்பைப் படித்துவிட்டு வேலை இல்லாதவர்களே இல்லை.

**எங்கு படிக்கலாம் ?**

- தென்னிந்திய மண்டலக் கவுன்சில், தி இன்ஸ்டிட்யூட் ஆஃப் சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட்ஸ் ஆஃப் இந்தியா, 122, மகாத்மா காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034, இணையத்தளம், www.icai.org
- ஐ.சி.டபிள்யூ.ஏ. தென்னிந்திய மண்டலம் கவுன்சில், 65 மாண்டியத் லேன், எழும்பூர், சென்னை - 600 008, இணையத்தளம், www.myicwai.com

- நன்றி : மனோராமா இயர்புக் 2009

❖❖❖❖

# மேனேஜ்மெண்ட்

தொழில் துறையின் அசுர வளர்ச்சி, தாராள பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக பன்னாட்டு நிறுவனங்களின் வருகை போன்றவை மேலாண்மைப் படிப்புகளுக்கான அவசியத்தை உருவாக்கியுள்ளது. இதையடுத்து பரம்பரையாகக்குடும்பத் தொழில் நடத்தி வந்த பெரிய நிறுவனங்கள் கூட காலத்திற்கேற்ப தங்களது தொழில் நிறுவனங்களை வளர்ச்சிப்பாதையில் நடத்திச்செல்ல சிறந்த மேனேஜ்மெண்ட் புரபஷனல்களை அமர்த்தத் தொடங்கியுள்ளன. எனவே மேனேஸ்மெண்ட் படிப்புகள் நட்சத்திர அந்தஸ்தை எட்டிவிட்டன.

- ❑ மேலாண்மைக் கல்வியில் முதுநிலைப் பட்டம் படித்தவர்களுக்கே நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்பதால் எம்.பி.ஏ., போன்ற மேலாண்மைக் கல்வியைப் படிக்கவே கடும் போட்டி நிலவுகிறது.
- ❑ இளநிலைப்பட்டநிலையில் மேலாண்மைப் படிப்பைப் படித்தவர்கள்தான் முதுநிலை மேலாண்மைப் படிப்பைப் படிக்கச் சேர வேண்டும் என்பதில்லை. எந்த இளநிலை பட்டம் பெற்றவர்களும் எம்.பி.ஏ. படிக்கலாம்.
- ❑ பல்கலைக்கழகங்களிலும், கலை அறிவியல் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் எம்.பி.ஏ. படிக்க வாய்ப்புகள் உள்ளன.
- ❑ இது தவிர மேலாண்மைக் கல்விக்கென பிரசித்த பெற்ற கல்வி நிறுவனங்களும் உண்டு.
- ❑ இந்திராகாந்தி தேசியத் திறந்த நிலைப் பல்கலைக்கழகம் உள்பட பல்வேறு பல்கலைக்கழகங்களில் தொலை நிலைக்கல்வி அளவில் கூட எம்.பி.ஏ. படிப்புகள் வந்துவிட்டன.
- ❑ படித்து வேலையில் இருப்பவர்கள் தங்கள் தகுதியை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் படிப்பதற்கு ஏற்ற மேலாண்மை படிப்புகளும் உள்ளன.
- ❑ மேலாண்மைக் கல்வியைப் படிக்க நாட்டில் ஏராளமான கல்விநிறுவனங்கள் இருந்தாலும் கூட நமது நாட்டில் மேலாண்மைக் கல்வியில் முன்னோடிக்கல்வி நிலையங்களாகத் திகழுபவை ஐ.ஐ.எம்.என்று அழைக்கப்படும் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மெண்ட் கல்வி நிலையங்கள்தான்.
- ❑ எம்.பி.ஏ.போன்ற முதுநிலைப்பட்டம் பெற்றவர்களுக்கு எந்தக்கல்வி நிலையத்தில் படித்தார்கள் என்பதைப்பொறுத்து வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. எனவே

பட்டத்துடன் அதை எந்தக் கல்வி நிறுவனங்களில் படித்துப் பெற்றார்கள் என்பதையும் பல நிறுவனங்கள் முக்கியமாகக் கருதுகின்றன.

- மாணவர்களின் மதிப்பெண்கள் மட்டுமல்ல, இதர திறமைகளையும் வேலைவாய்ப்புக்கு முக்கியமானதாகத் தொழில் நிறுவனங்கள் கருதுகின்றன.
- பொறியியல் படிப்புடன் மேலாண்மைப் படிப்பையும் படித்து முடிக்கும் மாணவர்களை நிர்வாகப்பணிக்கு அதிக அளவில் எடுத்துக்கொள்ளும் போக்கு சமீப காலமாக உள்ளது. எனவே, தங்களது சம்பளத்தையும் வேலை வாய்ப்புக்கான சாத்தியங்களையும் அதிகரித்துக்கொள்ளும் வகையில் பொறியியல் படிப்பை முடித்த கையோடு எம்.பி.ஏ. படிப்பதில் பல மாணவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள்.

தொழில் வளர்ச்சி மேலோங்கி வரும் கால கட்டத்தில் நிர்வாகப் படிப்புகளை முடித்த திறமையாளர்கள் தங்களது வேலை வாய்ப்பு குறித்துக் கவலைப்படத் தேவையில்லை. திறமையாளர்களைத் தேவையில்லை. திறமையாளர்களைத் தேடிக் கண்டுபிடித்து வேலையைக் கையில் கொடுக்கும் காலம் இது.

**எங்கு படிக்கலாம் ?**

- சர்வதேச அளவில் பிரசித்தி பெற்ற ஐ.ஐ.எம்.கல்வி நிறுவனங்கள் அகமதாபாத், பெங்களூர், கொல்கத்தா, இந்தூர், கோழிக்கோடு, லக்னோ, ஷில்லாங் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.
- இதேபோல, ஹைதரபாத்தில் உள்ள இந்தியன் ஸ்கூல் ஆஃப் பிசினஸ் முக்கியத்துவம் பெற்று வரும் முக்கியக் கல்வி நிறுவனம் ஆகும்.
- ஜாம் ஷெட்பூரில் உள்ள எக்ஸ்.எல்.ஆர்.ஐ.எனப்படும் சேவியர் லேபர் ரிலேஷன் இன்ஸ்ட்டியூட், மும்பையில் உள்ள எஸ்.பி.ஜெயின் இன்ஸ்டிட்யூட் ஆஃப் மேனேஜ்மெண்ட், சிம்பயாசிஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் பிசினஸ் மேனேஜ்மெண்ட், இன்ஸ்டியூட் ஆஃப் ரூரல் மேனேஜ்மெண்ட், ஜம்னாலால் பஜாஜ் இன்ஸ்டியூட் ஆஃப் மேனேஜ்மெண்ட் ஸ்டடீஸ், டி.ஏ. பை இன்ஸ்டியூட் ஆஃப் மேனேஜ்மெண்ட், புது தில்லி எஃப் எம்.எஸ். காசியாபாத் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மெண்ட் டெக்னாலஜி என்று இந்தியாவில் முக்கியமான மேலாண்மைக் கல்வி நிறுவனங்கள் ஏராளமாக உள்ளன. ஐ.ஐ.டி க்களில் உள்ள எம்.பி.ஏ. படிப்புகளும் முக்கியத்துவம் பெற்றவை.
- தமிழகத்தைப் பொருத்தவரை திருச்சி பாரதிதாசன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மெண்ட், சென்னையில் உள்ள இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபைனான்சியல்

மேனேஜ்மெண்ட் அண்ட் ரிசர்ச், லயோலா இன்ஸ்டியூட் ஆஃப் பிசினஸ் அட்மினிஸ்ரேஷன், மதுரை தியாகராஜர் ஸ்கூல் ஆஃப் மேனேஜ்மெண்ட் போன்ற கல்வி நிறுவனங்கள் குறிப்பிடத்தக்கவை.

**நுழைவுத்தேர்வு**

ஐ.ஐ.எம்.கல்வி நிறுவனங்களில் சேருவதற்கான நடத்தப்படும் நுழைவுத்தேர்வின் பெயர் கேட் எனப்படும் காமன் என்ட்ரன்ஸ் டெஸ்ட். இந்தக் கனவு மேலாண்மை கல்வி நிறுவனங்களில் உள்ள 1500 க்கு மேற்பட்ட இடங்களில் சேருவதற்காக கடந்த 2008 ஆம் ஆண்டு கேட் தேர்வை எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை 2.7 இலட்சம்.

**இட ஒதுக்கீடு**

தற்போது கிரீமிலேயர் வரம்பில் வராத (அதாவது ரூ. 4.5. இலட்சம் ஆண்டு வருவாய்க்கு மேற்படாத) பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் ஐ.ஐ.எம்.களில் இட ஒதுக்கீடு உள்ளது.

**மேனேஜ்மென்ட் துறைகள்**

காலத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப மேலாண்மைக் கல்வியிலும் சிறப்புத் துறைகள் பல வந்து கொண்டே இருக்கின்றன.

- அக்கவுண்டிங் மேனேஜ்மெண்ட்
- பயோ டெக்னலஜி மேனேஜ்மெண்ட்
- பிசினஸ் பிராசஸ் மேனேஜ்மெண்ட்
- பிராண்ட் மேனேஜ்மெண்ட்
- காஸ்ட் மேனேஜ்மெண்ட்
- கம்ப்யூட்டர் மேனேஜ்மெண்ட்
- கன்ஸ்ட்ரக்ஷன் மேனேஜ்மெண்ட்
- கோ ஆபரேட்டிவ் மேனேஜ்மெண்ட்
- டெய்ரி மேனேஜ்மெண்ட்
- டிசைன் மேனேஜ்மெண்ட்
- என்ஜினியரிங் மேனேஜ்மெண்ட்
- ஈவன்ட் மேனேஜ்மெண்ட்
- ஃபேஷன் மேனேஜ்மெண்ட்
- பைனான்ஸ் மேனேஜ்மெண்ட்
- பாரஸ்ட் மேனேஜ்மெண்ட்
- ஹெல்த்கேர் மேனேஜ்மெண்ட்
- ஹோட்டல் மேனேஜ்மெண்ட்
- நாலெட்ஜ் மேனேஜ்மெண்ட்
- ரிஸ்க் மேனேஜ்மெண்ட்
- சேல்ஸ் மேனேஜ்மெண்ட்
- குவாலிட்டி மேனேஜ்மெண்ட்

இப்படி மேலாண்மைக் கல்வியின் பயன்பாடு பல்வேறு துறைகளிலும் விரிந்து கொண்டே செல்கிறது.

- நன்றி : மனோராமா இயர்புக் 2009

❖❖❖❖❖